பக்கங்கள் 21

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 26 புதன்கிழமை 15.11.2023 அதிர்வு 107



## யானை தாக்கி பெண் மரணம்

காட்டு யானை தாக்கி குடும்பப் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந் துள்ளார்.

இந்தச் சம்பவம் 04

## இந்திய மீனவர்கள் 21 பேர் விடுதலை

### ஒருவருக்குச் சிறைத் தண்டனை

- ந.லோகதயாளன் -

எல்லை தாண்டி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 21 பேரை நிபந்தனையுடன் விடுதலை செய்தும், ஒருவருக்கு சிறைத் தண்டனை விதித்தும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் 04

## இரண்டு கோடி இருபது லட்சம் மக்களுக்கும் நட்டஈடு தர ராஜபக்ஷக்களிடம் நிதி உள்ளது

### நாடாளுமன்றத்தில் சுமந்திரன் தெரிவிப்பு

"நீதிமன்றம் நட்டஈட்டை வழங்குமாறு உத்தரவிட்டால் இரண்டு கோடி இருபது லட்சம் மக்களுக்கும் நட்டஈட்டை வழங்குவதற்கான பணம் ராஜபக்ஷக்களிடம் உள்ளது."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான 04



# நீதியே எமக்கு வேண்டும்

## காணாமல்போனோருக்கு பட்ஜட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு உறவுகள் வன்மையான கண்டனம்



(எஸ்.நிதர்ஷன்)

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர். நிதி கோரி தாம் போராடவில்லை என்றும், நிதி தமக்குத் தேவையில்லை என்றும், நீதியே தமக்கு வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். 04



## கொழும்பில் சுவர் விழுந்து பாடசாலை மாணவி பலி

### மேலும் ஐந்து மாணவர்கள் படுகாயம்

கொழும்பில் உள்ள பாடசாலை ஒன்றில் சுவர் சரிந்து விழுந்ததில் மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் ஐந்து மாணவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

தரம் 1 இல் கல்வி பயிலும் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 04



## யாழ். வரும் நடிகை குஷ்புக்கு எதிராக வலுக்கும் குரல்கள்!



- ந.லோகதயாளன் -

தென்னிந்தியத் திரைப்பட நடிகை குஷ்பு யாழ்ப்பாணம் வருகின்றமைக்கு அவருக்கு எதிரான எதிர்ப்புக் குரல்கள் பகிரங்கமாகப் பகிரப்பட்டு வருகின்றன. 04

## மூளைக் காய்ச்சலால் கிராம அலுவலர் சாவு

### யாழில் சோகம்

யாழ்ப்பாணத்தில் மூளைக் காய்ச்சலால் கிராம சேவையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உடுப்பிட்டி வடக்கு ஜே/353 கிராம சேவகர் பிரிவில் கடமையாற்றி 04

## நெடுந்தீவில் 750 துப்பாக்கி ரவைகள் மீட்பு





- ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம் – நெடுந்தீவில் 750 இற்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன.

நெடுந்தீவு கிழக்கு, 15ஆம் வட்டாரம் பகுதியில் மக்கள் நடமாற்றம் இல்லாத தனியார் காணியிலேயே துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த 04

# அரச ஊழியர்களுக்குப் 10 ஆயிரம் ரூபா; 2024 ஏப்ரல் மாதம் நடைமுறைக்குவரும்!

## நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்



வரவு - செலவு திட்ட முன்வைப்பில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் தொடக்கம் இந்த 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான கொடுப்பனவு ஒக்ரோபரில் இருந்து 6 மாத காலத்துக்குள் வழங்கப் படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது, இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்கள், வறுமையான மற்றும் பொருளாதார ரீதியில் பாதிக் கப்படக் கூடிய குடும்பங்கள், சிறிய மற்றும் மத்திய தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க சுட்டிக்காட்டினார்.

# எல்.ஐ.ஓ.சி. நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்படவிருந்த டீசல் தரமற்றது!

## ஆய்வக சோதனையில் கண்டறியப்பட்டதாகத் தகவல்

இலங்கை - இந்திய எண்ணெய் நிறுவனத்தால் (LIOC) இறக்குமதி செய்யப்படவிருந்த எரிபொருள் கப்பலில் இருந்த 19,000 மெட்ரிக் தொன் டீசலில், 11,000 மெட்ரிக் தொன் டீசல் தரமற்றுஉள்ளமை ஆய்வக சோதனைகளின் போது கண்டறியப்பட்டுள்ளது.

தரமற்ற டீசல் இறக்குமதிப் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை பெற்றோலிய சட்ட பூர்வக் கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலிய சேமிப்பு முனைய கம்பனி ஆகியவற்றின் முகாமைத்துவ பணிப்பாளர் தர்ஷன ரத்நாயக்க கருத்து வெளியிட்டுள்ளார்.

மேலும், 8400 மெற்றிக் தொன்



டீசல் இரண்டு ஆய்வக சோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே கொலன்னாவ எண்ணெய் சேமிப்பு முனையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் கடந்த 5ஆம் திகதி எம்.டி. ஃபோஸ் பவர் என்ற கப்பல் பெட்ரோல் மற்றும் டீசல் கையிருப்புகளுடன் நங்கூரமிடப்பட்டது.

அதனை தொடர்ந்து, தரநிலை ஆய்வுகளின் பின் அந்தக் கப்பலில் இருந்த 92 ஒக்டேன் பெட்ரோலை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது, டீசல் கையிருப்புகளின் ஆய்வு நிறைசெய்யப்படாததால் அதை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட வில்லை.

இந்த நிலையில், கப்பலில் இருந்து இறக்குமதி செய்யப்படவிருந்த 19,000 மெட்ரிக் தொன் டீசலில் 11,000 மெட்ரிக் தொன் டீசல் தரமற்றது என்று ஆய்வக சோதனைகளின் போது கண்டறியப்பட் டுள்ளது.

# தனியான துறைமுகமாகிய மன்னார் துறைமுகம்!

மன்னார் துறைமுகமானது இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் கீழ் தனியான துறைமுகமாக பெயரிடப்பட் டுள்ளது என்றுதெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் துறை முகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவால் வெளியிடப்பட் டுள்ளது.


நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல்



இந்த வர்த்தமானி அறிவித்தல் நடைமுறைக்கு வரவுள்ளது என்று குறிப் பிடப்படுகின்றது.

இந்த நிலையில் மன்னார் மற்றும் இந்தியாவுக்கு இடையில் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதை நோக்கமாகக் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.





# சுவிஸ் தூதர் - ஹக்கீம் சந்திப்பு!

(அஸ்ஹர் ஆதம்)

இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான சுவிஸ் நாட்டின் புதிய தூதுவர் சிரி வொல்ட், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமைச் சந்தித்துக் கலந்துரையாடினார்

இந்தச் சந்திப்பு கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நேற்று (14) பிற்பகல் இடம் பெற்றது.

இதன் போது நாட்டின் தற்போதைய அரசியல் சூழ் நிலைகள் தொடர்பாகவும் பலஸ்தீன் மற்றும் இஸ்ரேல் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப் பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கொழும்பு சைவ மங்கையர் மாணவிகளுக்கு தேசிய தமிழ்த் தின போட்டியில் 32 பதக்கங்கள்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தமிழ் மொழித் தினப் போட்டியில் கொழும்பு சைவ மங்கயர் பெண்கள் இந்துக் கல்லூரி மாணவிகள் பங்குபற்றி மொத்தம் 32 பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இசைக்குழு 1, இசைக்குழு 2, நாட்டிய நாடகம் என்பன இரண்டாம் இடங்களையும், வாசிப்பு -பிரிவு 3, இசை தனி – பிரிவு 1 என்பன மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டுள்ளன.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் நெறிப்படுத்திய ஆசிரியர்கள் திருமதிகள் தாரணி இராஜ்குமார், ஹம்சா பிரபாகர்,ஷாலினி வாகீஸ்வரன், நிவாசினி சக்திவேல், அமுதினி மலர் செல்வன், திரு.இ.ஸ்ரீகாந், வாசுதேவா ஆகியோருக்கு அதிபர் உள்ளிட்ட கல்வி சமூகத்தினர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.





# வவுனியாவில் இரு குளங்கள் உடைப்பெடுப்பு!

(அ.அஸ்வர்)

தற்பொழுது பெய்துவரும் அதிக மழை வீழ்ச்சி காரணமாக வவுனியா ஆசிக்குளம் கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட சின்னக் கோமரசங்குளம் மற்றும் சின்னக் குளம் ஆகிய இரு குளங்களும் உடைப்பெடுத்துள் ளன.

இந்தக் குளங்களுக்கு உட்பட்ட சுமார் 100 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கி அழிவடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது. குளத்து நீர் தொடர்ந்தும் வெளியேறிக் கொண்டிருக்கிறது.

இந்தக் குளங்களை அண்மித்து வாழும் மக்களைச் சற்று அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. குளங்களை நேரில் சென்று பார் வையிட்ட மாவட்ட செயலர் பி.ஏ. சரத்சந்ர இதனை விரைவில் சீர் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தெரிவித்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரண்டு கோடி...

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இன்று வரவு - செலவுத் திட்டத்தில் இரண்டாம் வாசிப்பின் மீது நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் இதனைக் குறிப்பிட்ட அவர், இந்தப் பணத்தை மீட்கும் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

நாட்டுக்கு வெளியே ராஜபக்ஷ சகோதரர்கள் சேர்த்துவைத்துள்ள பணத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மீட்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "வெளிநாட்டில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள பணம் அனைத்தையும் நாட்டுக்குள்கொண்டுவரமுடியும்.அந்தப்பணத்தை வைத்து நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பலாம். முன்னாள் ஜனாதிபதியும் அவரது சகோதாரர்களும் அவர்களுடன் இணைந்து பணியாற்றியவர்களும் பொது நிதியைக் கொள்ளையடித்தன் காரணமாகவே நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குப் பட்டது. அவர்கள் நட்டஈட்டைச் செலுத்த வேண்டும் என நீதிமன்றம் உத்தர விட்டிருக்க வேண்டும்." - என்றார்.

## கொழும்பில் சுவர் விழுந்து...

சம்பவத்தில் நான்கு மாணவர்களும், இரு மாணவிகளும் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்களில் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நீதியே எமக்கு வேண்டும்...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் யாழ்ப்பாணம் மாவட்ட சங்கத்தின் தலைவி சிவபாதம் இளங்கோதை இதனைக் கூறினார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2024ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் காணாமல்போனவர்களுக்கு எனப் பெரும் நிதி ஒதுக்கியுள்ளார்கள். எங்கள் பிள்ளைகள் வீதிகளில் அல்லது காடுகளில் காணாமல்போனவர்கள் அல்லர். மன்னிப்பு அளிப்பதாக அரசும் படைகளும் கூறியதைக் கேட்டு எங்கள் பிள்ளைகள் சரணடைந்தார்கள். எங்கள் வீடுகளுக்குள் புகுந்தும் எங்கள் பிள்ளைகளைக் கடத்திச் சென்றார்கள் - கைது செய்தார்கள். அதன்பின்னரே எங்கள் பிள்ளைகளை அவர்கள் காணாமல் ஆக்கியுள்ளார்கள்.

இது தொடர்பில், சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என நாங்கள் கோரி வருகிறோம்.

விசாரணைகளை மேற்கொள்ளாது நிதியைத் தர முயல்கின்றனர். காணாமல்போனோருக்கான நிதியைத் தென்னிலங்கையில் காணாமல்போனோருக்கு வழங்குங்கள். எங்களுக்கு இந்தப் பணம் வேண்டாம். நாங்கள் தேடுவது எங்கள் பிள்ளைகளையே.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்களில் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்து விட்டனர். ஆனாலும், நாங்கள் தொடர்ந்து எங்கள் உறவுகளைத் தேடி வருகின்றோம்.

எனவே, பணம் தந்து எங்களை ஏமாற்ற வேண்டாம். நாங்கள் காசு வாங்க வர மாட்டோம். எங்களுக்கு நீதியே வேண்டும்.

14 வருடங்களாக நாங்கள் தொடர்ந்து போராடுவது காசுக்காக அல்ல. எங்கள் பிள்ளைகளுக்காகவே நாங்கள் தொடர்ந்து போராடி வருகின்றோம்." - என்றார்.

## மூளைக் காய்ச்சலால்...

வந்த குமாரன் குகதாசன் (வயது 48) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் தீபாவளி தினத்தன்று தனது வீட்டில் இருந்த வேளை திடீரென மயங்கி விழுந்துள்ளார். அதையடுத்து வீட்டார் அவரை அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணையின்போது மூளைக் காய்ச்சலால் மரணம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்திய மீனவர்கள்...

உத்தரவிட்டுள்ளது. அதாவது 21 பேரும் ஐந்து ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 18 மாதச் சிறைத் தண்டனையுடன் விடுவிக்கப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை இன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றது.

இதன்போது 22 மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் இரண்டாவது தடவையாக இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய நிலையில் அவருக்குச் சிறைத் தண்டனை விதித்தும், ஏனைய 21 மீனவர்களை நிபந்தனையுடன் விடுதலை செய்தும் நீதிவான் உத்தவிட்டார்.

## யாழ். வரும் நடிகை...

யாழ்ப்பாணம், முற்றவெளியில் எதிர்வரும் டிசம்பர் 21ஆம் திகதி இடம்பெறும் இசை நிகழ்ச்சிக்காகத் தமிழகத்திலிருந்து பல கலைஞர்கள் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர். இதில் நடிகை குஷ்புவும் ஒருவராக வருகை தரவுள்ளார்.

இவ்வாறு வருகை தரும் நடிகை குஷ்பு இந்திய ஊடகம் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கருத்தைத் தெரிவித்துவிட்டு விடுதலைப் புலிகள் அமைப்பின் உறவுகளை மகிழ்வித்தல் என்னும் பெயரில் இங்கு வருகின்றார் எனவும், எனவே விடுதலைப் புலிகள் தொடர்பில் அவர் தெரிவித்த கருத்துக்குப் பகிரங்கமாக மன்னிப்புப் கோர வேண்டும் எனவும் சமூக வலைத்தளங்களில் பதிவிடப்பட்டு வருகின்றது.

இருந்தபோதும் இந்தக் கண்டனக் குரல்கள் தொடர்பில் குஷ்பு எதனையும் தெரிவிக்கவில்லை.

## யானை தாக்கி...

ஹிங்குராங்கொட, பாலுவேவ பிரதேசத்தில் இன்று காலை இடம்பெற்றுள்ளது என்று ஹிங்குராங்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

சந்துசிறி மல்காந்தி என்ற 60 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயே சாவடைந்துள்ளார்.

இவர் ஹிங்குராங்கொட பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டலில் பணியாற்றியவர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவர் இன்று காலை தனது வீட்டிலிருந்து ஹோட்டலுக்குச் சென்று கொண்டிருந்தபோது காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என்று ஹிங்குராங்கொட பொலிஸார் மேலும் கூறினர்.

## நெடுந்தீவில்...

இரகசியத் தகவலுக்கமைய அந்தப் பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ள நெடுந்தீவுப் பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றனர்.

ஜே.சி.பி. இயந்திரத்தின் உதவியுடன் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் இணைந்து நேற்று நடத்திய தேடுதலில் ரி - 56 ரகத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 750 இற்கும் மேற்பட்ட ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலையில் இடைநிறுத்தப்பட்டது.











# அம்பாறையில் பசுமைத் திட்டம்!

(பாறுக் ஷிஹான்)

இயற்கையை நேசித்து சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீயின் எண்ணத்தில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மர நடுகை வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய அம்பாறை பிரதிப் பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீ வழிநடத்தலில் முப்படைகள் மற்றும் சமூக செயற்பாட்டு அமைப்புக்களின் பங்களிப்புடன் அம்பாறை நகரை பசுமை நகரமாக மாற்றும் நோக்கில் இரண்டாம் கட்ட பசுமை திட்ட நிகழ்வு கடந்த மாதம் ஆரம்பமானது.



அதன் தொடர்ச்சியாக 5 ஆயிரத்து 500 செடிகள் நடும் திட்டத்தில் அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மறுசுழற்சி நிலையத்துக்கு அருகாமையில் நேற்று 3 ஆயிரத்து 200 செடிகள் நடப்பட்டன.

இதன் போது அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டபிள்யூ.டீ.வீரசிங்க, அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம, அம்பாறை மாவட்ட ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரட்னாயக்க, உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், முப்படை அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டனர்.

# அக்கரைப்பற்று வலயத்தின் கலாசார பயிற்சிப் பாசறை





(கே. எ. ஹமீட்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் தேசிய நல்லிணக்க கலாசார பயிற்சிப் பாசறை நேற்று (14) அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஹ்.யு.ஆ. றஹ்மத் துல்லாஹ் தலைமையில் நடைபெற்றது.

வலயமட்ட சிங்கள கலாசார விழாவில் ஒலுவில் அல்– மதீனா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக இடம்பெற்று அதிதிகளின் பாராட்டைப் பெற்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறைக்கான சகல ஏற்பாடுகளையும் விளையாட்டுத் துறை இணைப்பாளரும் ஆரம்ப பிரிவு ஆசிரிய ஆலோசகருமான ஏ.எல். பாயிஸ் மேற்கொண்டிருந்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தண்டனை இல்லாத் தீர்ப்பு

கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட பிரதிவாதிகளின் தவறான பொருளாதார முகாமைத்துவத் தீர்மானங்கள் காரணமாக மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

2019ஆம் ஆண்டிலிருந்து 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் எடுக்கப்பட்ட தவறான பொருளாதார முகாமைத்துவ தீர்மானங்கள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது எனத் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் இலங்கையில் வழங்கப்பட்ட அரசியல் தீர்மானங்கள் தொடர்பான வழக்குகளில் இது மிக முக்கியமானது.

இந்த வழக்கையொட்டி இரண்டு முக்கிய கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

ஒன்று - அரசியல் தலைவர்களின் அரசியல் ரீதியான முடிவுகளை ஆராய்ந்து, நீதிமன்றங்கள் சரி, பிழை கூற முடியுமா? அது நேரடி அரசியலில் நீதிமன்றங்கள் தலையிடுவதாகி விடாதா?

அடுத்தது - அடிப்படை உரிமைகளை மீறியவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பு ஏதும் வழங்காதமை சரியா? அதுவும் முழு நாட்டின் பொருளாதார கட்டமைப்புகளையே சீர்குலைக்கும் முடிவுகள், தீர்மானங்களை எடுத்து, நாட்டையே மீள முடியாத பொருளாதாரச் சிக்கலில் மாட்ட வைத்தவர்கள் எனத் தான் அடையாளம் கண்டவர்களுக்கு நீதிமன்றம் தண்டனை வழங்காமல் விடுவது சரியா?

முதலாவது - மேற்படி மூவரும் அவர்களது சகாக்களும் எடுத்த அரசியல் தீர்மானங்கள் குறித்து உயர்நீதிமன்றம் குறை கூறவில்லை. நீதிமன்றம் தலையிட்டுக் குறை கூறிய விடயங்கள் நிறைவேற்று அதிகார நடவடிக்கைகள் தொடர்பானவை. அத்தகைய நடவடிக்கையில் தலையிடவும், சரியானதைத் தெரிவிக்கவும், செய்விக்கச் செய்யவும் நீதிமன்றங்களுக்கு கடப்பாடும் பொறுப்பும் நியாயாதிக்கமும் உண்டு. அந்த வகையிலே உயர்நீதிமன்றம் இவ்விடயத்தில் தலையிட்டிருக்கின்றது. அது தவறல்ல.

அடுத்து - தண்டனை தீர்ப்புப் பற்றிய விடயம். 269 பேர் உயிரிழக்கவும் சுமார் ஐந்நூறு பேர் காயமடையவும் காரணமானவர் என்று குறிப்பிட்டு, முன்னைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பத்துக் கோடி ரூபா நஷ்டஈடு செலுத்த உத்தரவிட்ட இதே உயர் நீதிமன்றம், முழு நாட்டையும் மக்களையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி, நட்டாற்றில் விடும் தீர்மானங்களை எடுத்தவர்கள் என்று தான் அடையாளம் கண்ட ராஜபக்ஷக்களுக்கு எதிராக எந்த தண்டனையுமே விதிக்கவில்லை. இது நியாயமா? இது நீதித்துறையில் கேலிக்கூத்து (Mockery of Justice) இல்லையா?

அதுவும் மைத்திரிபால சிறிசேன மக்களைப் பாதுகாப்பது தொடர்பான தமது கடமைகளைச் சரிவரச் செய்யவில்லை என்ற அடிப்படையில் அவர் மீதான குற்றத்தை உயர்நீதிமன்றம் கண்டது. அது கடமையைச் செய்ய தவறியமை. இதுவோ - ராஜபக்ஷக்களுக்கு எதிராக உயர்நீதிமன்றம் கண்ட குற்றமோ - தவறான தீர்மானங்களை எடுத்து, மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்த விவகாரமாகும். அப்படிப் பார்த்தால் மைத்திரிக்கு வழங்கியதை விடவும் அதிக தண்டனை ராஜபக்ஷக்களுக்கு நீதிமன்றம் விதித்திருக்க வேண்டும்.

ஆனாலும் உயர்நீதிமன்றம் அப்படி விதிக்காமைக்குக் காரணம் உண்டு. அடிப்படை உரிமை மீறல் வழக்கில் பொதுவாக மனுதாரர் கோராத நிவாரணம் ஒன்றை உயர்நீதிமன்றம் தானாக வழங்க முன் வராது. இந்த வழக்கிலும் மனுதாரர்கள் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டன என்று தீர்ப்பளிக்கும்படியே பொதுநல அடிப்படையில் கோரினர். சம்பந்தப்பட்டோருக்கு தண்டனை விதிக்கக் கோரவில்லை.

எனினும், பி.பி.ஜயசுந்தரவுக்கு எதிரான ஒரு வழக்கில் சர்ச்சைக்குரிய பிரதம நீதியரசரான சரத் என்.சில்வா தலைமையிலான உயர்நீதிமன்ற ஆயம், மனுதாரர் கோராமல் தானாகத் தேடி வலிந்து 5 லட்சம் ரூபாத் தண்டனைத் தீர்ப்பை அவருக்கு எதிராக வழங்கிய சம்பவம் இல்லாமல் இல்லை.

இப்போதைய வழக்கிலும் கூட நாட்டின் பொருளாதாரத்தையே சீரழித்த குற்றத்திற்காக நாட்டின் பொதுக் கணக்கு ஒன்றுக்கு வரவு வைக்கத்தக்கதான தண்டனைத் தீர்ப்பு ஒன்றையும் நீதிமன்றம் வழங்கி இருக்க முடியும். வழங்கி இருக்க வேண்டும். வழங்கவில்லை. அதுதான் நிலைமை.




## அட்டாளைச்சேனையில் டெங்கு ஒழிப்பு!

(எம். எப். நவாஸ்)

டெங்கு நோய் மற்றும் மரணத்தில் இருந்தும் எம்மை பாதுகாப்போம் எனும் தொனிப் பொருளில் பாலமுனை பிரதேசத்தில் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் இடம் பெற்றன.

அந்த நிகழ்வில் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கண்காணிப்பில் பொது மக்கள் கலந்து கொண்டு சுற்றுச் சூழலை சுத்தம் செய்தனர்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

“பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது.”

-மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)





# சம்மாந்துறை வர்த்தகருக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட செயலகம் சம்மாந்துறை பிரதேச சபையுடன் இணைந்து சம்மாந்துறை பிரதேசத்தி லுள்ள வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை பிரதேச சபையின் பிரதான கேட்போர் கூடத்தில் நடத்தியது.

சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி சாலிந்த பண்டார மற்றும் புலன் விசாரணை அதிகாரிகளான முஹம்மட் ஸாஜீத் ஸமான், எம்.எச். எம்.றிபாஜ் ஆகியோர் பிரதான வளவாளராக கலந்து கொண்டனர்.



வியாபார செயற்பாடுகளின் போது வர்த்தகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட, ஒழுங்குகள், விதிமுறைகள் மற்றும் நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள அரச கட்டுபாட்டு விலைகள் குறித்து தெளிவுபடுத்தினர்.

இதன்போது வர்த்தகர்களால் எழுப்பப்பட்ட வினாக்கள் மற்றும் சந்தேகங்களுக்கும் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

# சட்ட இளமாணி பட்டம் பெற்றார்!

(மன்னார் நிருபர்)

ஐ.டி.எம். தேசிய கம்பஸின் 2023 ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழா கடந்த சனிக்கிழமை (11) கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் BUCKINGHAMSHIRE NEW UNIVERSITY, UK இல் சட்ட இளமாணி கற்கையை நிறைவு செய்த மன்னார் அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை அதிபர் ஜனாப் எம்.வை மாஹிர் சட்ட இளமாணிப் பட்டத்தை பெற்றுக் கொண்டார்.

இவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை சிறப்புப் பட்டதாரியும், முன்னாள் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை விரிவுரையாளரும், இந்நாள் மன்னார் அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையின் அதிபரும் ஆவார்.






# உளநலப் பிரிவு உருவாக்க நடவடிக்கை

(அஸ்ஹர் ஆதம்)

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பால் காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையில் உளநல ஆலோசனைப் பிரிவு உருவாக்கப்படவுள்ளது. இதற்குத் தேவையான பொருள்கள் மற்றும் தளபாடங்கள் அவர்களால் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இதன் போது அருவி பெண்கள் வலையமைப்பின் முக்கியஸ்தர்கள் உட்பட அதிபர் மற்றும் ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.





# திருமலை மாவட்ட செயலகத்தில் டெங்கு, விவசாயக் குழுக்கூட்டம்!

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட டெங்கு, விவசாயக் குழுக்கூட்டம் மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நேற்று (14) திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



திருகோணமலை மாவட்டத்தில் ஆண்டு வாரியாக டெங்கு நோய் பரவலும் மக்களின் எண்ணிக்கையும், கடந்த 10 ஆண்டுகளில் டெங்கு வழக்குகள், மாவட்டத்தில் டெங்கின் நிலைமை, டெங்கின் தற்போதைய போக்கு போன்ற பல விடயங்கள் திருகோணமலை சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளர் டாக்டர் வி.பிரேமானந்த் மற்றும் பூச்சியியல் அதிகாரிகளாலும் இதன்போது எடுத்துக் கூறப்பட்டது.

மேலும் பூச்சியியல் கண்காணிப்பு என்றால் என்ன, நோக்கங்கள், இனப்பெருக்கம் செய்யும் இடங்கள், டெங்கைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் எடுக்கும் நடவடிக்கைகள் போன்ற பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் ஏ.கே. அப்துல் ஜப்பார், மாவட்ட செயலக விவசாய பணிப்பாளர் னுச. டி.கருணைநாதன், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் மற்றும் விவசாய அமைப்பின் தலைவர்கள் , மேலதிக மாவட்ட அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# உலக உணவுத் திட்டத்தின் கீழ் உலர் உணவு பொதிகள் வழங்கல்

(நூருல் ஹுதா உமர் )

உலக உணவுத் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்திலுள்ள வறிய, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், நிந்தவூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 25 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய 2 ஆயிரத்து 793 பயனாளிக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

அவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நிந்தவூர் பிரதேச செயலர் சட்டத்தரணி ஏ. எம். அப்துல் லத்தீப் தலைமையில் நேற்று (14) பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவு பொதிகளை வழங்கினார்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குத் தலா 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஏ.அனீஸ், உலக உணவுத் திட்டத்தின் இணைப்பாளர் எஸ்.பத்மன் மற்றும் உலக உணவுத்திட்ட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஏ.வின்சன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.சுல்பிகார் நெறிப்படுத்தலில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.



# புனரமைப்பு இன்றிக் காணப்பட்ட ஹுனைஸ் நகர் வீதி வெள்ளத்தில்!

## அபிவிருத்திப் பணிகள் இன்றிச் சிரமத்தில் மக்கள்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் மாவட்டம், முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஹுனைஸ் நகர் கிராம மக்கள் மீள்குடியேறி சுமார் 13 வருடங்களாகியும் அவர்களின் அடிப்படை வசதிகள் பல இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருப்பதாக அக்கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடற்றொழிலை ஜீவனோபாயமாக கொண்டிருக்கும் இந்தக் கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக பெய்து வரும் கடும் மழை காரணமாக இவர்கள் பயன்படுத்தும் கடற்கரை வீதி முற்றாக வெள்ளத்தில் மூழ்கியதில் தொழிலுக்கு செல்ல முடியாது அசௌகரியங்களை சந்தித்துள்ளனர்.

சுமார் 1.45 கிலோ மீற்றர் தூரம் கொண்ட கடற்கரை வீதியில் 100 மீற்றர் தூரம் மாத்திரமே செப்பனிடப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதி குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

மழை காலங்களில் முற்றாக இந்த வீதி பயன்படுத்த முடியாதவாறும் வெள்ள நீர் வழிந்தோட முடியாதவாறும் உள்ளது.

அத்துடன் நீண்ட காலமாகப் பழுதடைந்துள்ள தெரு விளக்குகள் பல இன்னமும் திருத்தப்படாமல் உள்ளது.

இந்தக் கிராம மக்கள் மழை காலங்களில் உள்ளக வீதிகளை பயன்படுத்துவதிலும் சொல்லனா துயரங்களை அனுபவித்து வருகின்றனர். அரசியல் ரீதியாக இந்த ஊர் பழிவாங்கப் படுவதாகவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரு விளக்குகளையாவது பொருத்தித்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்கின்றனர்.

வீதிகளை செப்பனிட்டுத் தருமாறும் சீரான வடிகான் வசதிகளையும் அமைத்துத் தருமாறு ஹுனைஸ் நகர் கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.





# மட்டக்களப்பு செயலகத்தில் மனித உரிமைகள் பயிற்சி!

**(எஸ்.கீதபொன்கலன்)**

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான மனித உரிமை அணுகு முறை தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தலைமையில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சமிந்த கெட்டியாராச்சியின் பங்கு பற்றுதலுடன் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வை பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் மனித உரிமை கற்கைகளுக்கான நிலையம் ஆகியன இணைந்து நடத்தியிருந்தன.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட பிரதேச செயலாளர்கள் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகல் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதில் சட்ட உதவியைப் பெறுவதற்கான செயல்முறை இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதன் போது மொழி உரிமை, இன நல்லிணக்கம், சமத்துவம், மனித உரிமை சட்டங்கள், நடைமுறைப் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

நீதித்துறைக்கான அனுசரணைத் திட்டத்தை ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் நாடளாவிய ரீதியில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் ஊடாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிகழ்வில் நீதிக்கான ஆதரவு திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி திருமதி.சுனரா சும்சுதீன் கலந்து கொண்டார். இப்பயிற்சி நெறியின் வளவாளராக சட்டத்தரணி எம். திருணாவுக்கரசு கலந்து கொண்டார்.



# சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிக்கு புதிய உதவி முகாமையாளர்

**(அஸ்ஹர் ஆதம்)**

சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சமுர்த்தி வங்கியின் உதவி முகாமையாளராக எம்.யூ.ஹில்மிக்கான நியமிக்கப்பட்டுள்ளார்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் இந்த நியமனத்தை வழங்கியுள்ளது.

இவர் பிரதேச செயலாளரர் எம். எம். ஆசிக் முன்னிலையில் நேற்று (14) சமுர்த்தி வங்கியில் வைத்து தனது கடமைகளையும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், வங்கிச் சங்க முகாமையாளர் றியாத் ஏ.மஜீத், திட்ட முகாமையாளர் எஸ். றிபாயா வங்கி முகாமையாளர் எம்.ஐ. ஹிதாயா உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சாமிமலை நிலாவத்தை தோட்டத்தில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டன

**(மஸ்கெலியா நிருபர்)**

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் சாமிமலை ஓல்டன் தோட்ட நிலாவத்தை பிரிவில் மனித எச்சம் கிடப்பதை கண்ட அந்தப் பிரிவில் உள்ள மக்கள் மஸ் கெலியா பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தனர்.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன் அதே தோட்டத்தை சேர்ந்த கிட்னசாமி கிருஷ்ணசாமி (70 வயது) என்பவர் காணாமல் போயிருந்தார்.

இந்த நிலையில் அந்த மனித எச்சம் அவருடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அந்த தோட்ட நிர்வாகம் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறிவித்துள்ளது.

மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து நிலைமையைப் பார்வையிட்டனர்.

அந்தப் பகுதி பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளது. ஹட்டன் நீதிமன்ற நீதிவான் நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் எழும்புகள் டி.என்.ஏ. பரிசோதனைக்காக கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட வுள்ளன.

ஹட்டன் தடையவியல் பொலிஸார், திடீர் மரண விசாரணை அதிகாரி ஆகியோர் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

# இளைஞர் ஒன்று கூடல்

**(அஸ்ஹர் ஆதம்)**

சம்மாந்துறை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இளைஞர் அணியாக செயற்பட்டுவரும் இளைஞர் காங்கிரஸின் வட்டார மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை மீளமைக்கும் 2 ஆம் கட்ட கலந்துரையாடல் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இளைஞர் காங்கிரஸ் ஸ்தாபக தலைவர் ஹாதிக் இப்றாஹிம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது வட்டாரங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கி இளைஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.







# அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நலன்புரிச் சங்க விற்பனை நிலையம்

(எம். எப். நவாஸ்)

அக்கரைப்பற்று பிரதேச செயலக நலன் புரிச் சங்கத்தால் பிரதேச செயலக வளாகத்தில் நலன் புரிச் சங்க விற்பனை நிலையம் பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சாரால் நேற்று முன்தினம் (13) திறந்து வைக்கப்பட்டது.

வாகன காப்பீடு, போட்டோ பிரதி, கட்டணங்களைச் செலுத்துதல், தட்டச்சு, மொழி பெயர்ப்பு, தேசிய அடையாள அட்டை போட்டோ என்பன இந்த நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர் றாசித் எஹியா, கணக்காளர் எஸ்.எல்.சர்தார்மிர்சா, உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.பாறுக், நலன் புரிச் சங்கச் செயலாளர் என்.ரீ.மசூர் (திட்ட முகாமையாளர்) மற்றும் அலுவலகஉத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# அம்பாறை கனகர் கிராமத்தில் 73 பேருக்கு காணிப் பத்திரம்!

(அஸ்ஹர் ஆதம்)

அம்பாறை மாவட்டத்தில் கனகர் கிராமத்தில் போரால் பாதிக்கப்பட்ட 73 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை வழங்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியகக் கலந்து கொண்டு இவர்களுக்கான காணிப் பத்திரங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கலையரசன், எஸ்.எம்.எம்.முஷாரப் கபில நுவன் அத்துகோரல ஆகியோர் உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.







# தொழில் முயற்சியாண்மைத் திட்டம் பாடசாலைகளில் அங்குரார்ப்பணம்!

(வி.ரி. சகாதேவராஜா)

ஜனாதிபதியின் ஆலோசனைக்க மைய இலங்கையின் கல்வி அமைச்சும் கைத்தொழில் அமைச்சும் இணைந்து கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடாக பாடசாலைகளில் தொழில் முயற்சியாண்மை வட்டம் என்ற தேசிய வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அந்த வகையில் அம்பாறை மாவட் டத்தில் முதன் முதலாக திருக்கோவில் வலயத்துக்கு உட்பட்ட அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா தேசிய பாடசாலையில் இந்த வேலைத் திட்டம் நேற்று (14) செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துவைக் கப்பட்டது.

தென்கிழக்கு பல்கலைக்கழக பேரா சிரியர் செல்வரெத்தினம் குணபாலன் சிறப்புப் பேச்சாளராக கலந்து கொண் டார்.

இந்த நிகழ்வு பாடசாலையின் பிரதி அதிபர் சி. மதியழகன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர் களாக இலங்கை தென்கிழக்கு பல் கலைக்கழகத்தின் முகா மைத்துவத் துறை சிரேஷ்ட பேராசிரியர் செல்வரெத் தினம் குணபாலன் கலந்து கொண்டார்.

நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப் பாளர் எம்.பி.எம்.நளீம், இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அம்பாறை மாவட்ட பிரதி பணிப்பாளர் கே.எல்.ஏ. ஆரியகீர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கைத்தொழில், முயற்சியாண்மை, தேசிய மற்றும் சர்வதேச சந்தை வாய்ப் புக்கள், தொழிற்சந்தை மற்றும் மாணவர்களின் எதிர்காலம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரி வாக உரையாற்றினர். பாடசாலை கைத் தொழில் முயற்சியாண்மை வட்டங்களை யும் தெரிவு செய்து வழிப்படுத்தினர்.

இதன்போது கைத்தொழில் அபிவி ருத்திச்சபையின்உத்தியோகத்தர்களான ஐ.எல்.எம்.சப்ரீ, எஸ்.அபேரத்ன மற்றும் எம். ஏ. எம்.. முர்ஷித் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வலயத்துக்கு ஒரு பாடசாலை தெரிவு செய்யப்பட்டு இவ்வேலைத்திட்டம் முன் னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.



# தென் கிழக்கு பல்கலைகழகத்தில் ஊடக பிரிவுக்குப் புதிய நிர்வாகம்!

(நூருல் ஹுதா உமர் )

தென்கிழக்கு பல்கலைகழக ஊடக பிரிவுக்கு புதிய நிர்வாகிகள் பல்கலை கழக உப வேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கரால் நியமனம் செய்யப்பட் டுள்ளனர்.

பல்கலைகழக ஊடக பிரிவின் இணைப்பாளராக சிரேஷ்ட விரிவு ரையாளர் கலாநிதி எப்.எச்.ஏ.ஷிப்லி, செயலாளராக தென் கிழக்கு பல் கலைக்கழக கணக்காய்வு உதவியாளர் எஸ்.எம். கலீல் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஊடக பிரிவுக்கு உறுப்பி னர்களாக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம்.எம். சிராஜ், விரிவுரையாளர் எம் அப்துல் ரஸாக், விரிவுரையாளர் சதீக்கா பர்வீன், விடுதி பொறுப்பாளர் ஆர். ரிஸானா, சிரேஷ்ட நூலக உதவி யாளர் சீ.எம்.ஏ. முனாஸ், ஆய்வு கூட உதவியாளர் எம் வை அமீர், உட்பட பல்கலைக்கழக மாணவர் சார்பில் எம்.ஏ. ஸீம் பிஸ்தி (கலை கலாச்சார பீடம்), டி.எம்.வை. லசித் (பொறியியல் பீடம்), இஸட்.எஸ்.எஸ். குணரத்ன (தொழில் நுட்ப பீடம்) ஆகியோரும் ஊடக பிரிவின் உறுப்பினர்களாக நிய மிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைகழக ஊடகப் பிரிவைப் பலப்படுத்தி மாணவர்களை ஒன்றி ணைத்து எதிர்காலத்தில் சிறப்பாக பெறுபேறுகளை மக்கள் முன் கொண்டு செல்ல ஆக்க பூர்வமான திட்டங்கள் குறித்து விஷேட கலந்துரையாடலும் உபவேந்தர் தலைமையில் இடம்பெற் றமை குறிப்பிடத்தக்கது.

सत्यमेव जयते

இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்

# நல்லதோர் குடும்பம்



சிறப்புரை
திரு. மோகனசுந்தரம்
நகைச்சுவை பேச்சாளர்

இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்
காலம் : 18 நவம்பர் 2023 (சனிக்கிழமை)
நேரம் : மாலை 05.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அனுமதி இலவசம்

JRIDE BEYOND THE ROAD

ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA

நாங்கள் தயார் நீங்கள் தயாரா?
WE ARE READY ARE YOU READY?

+94 703 563213 +94 21 222 8358
www.jride.lk
JRIDE TAXI SERVICE
SPEED IT NET

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள். இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VANRENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882





# சுதேச மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் கிழக்கில் 1000 மரக் கன்றுகள் நடல்!

(அபு அலா)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தில் 1000 பயன்தரும் மரக் கன்றுகள் நடும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு அட்டாளைச்சேனை அந்நூர் மகா வித்தியாலயத்தில் நேற்று முன் தினம் (13) இடம்பெற்றது.

"மாகாணம் செழிக்க மரம் நடுவோம்" எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.முஹம்மது பைஷல் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு அட்டாளைச்சேனை தள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர்எஸ்.அப்துல்ஹை பிரதம அதிதியாக கலந்துகொண்டு மரம் நடும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

பிரதேசம் செழித்தால், மாவட்டம் செழிக்கும். மாவட்டம் செழித்தால், மாகாணம் செழிக்கும். மாகாணம் செழித்தால், நாடு செழிக்கும். இதுவே இந்தத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இந்தப் பயன்தரும் 1000 மரக்கன்றுகளை இவ்வருட இறுதிக்குள் மாகாணத்திலுள்ள பிரதேசங்களில் நட்டு வைக்கப்படும் என்று கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.முஹம்மது பைஷல் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.ஆர்.எம். றிம்ஸான், உபதலைவர், பொருளாளர், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# "கோப்" சமூக சேவை அமைப்பின் மாபெரும் இரத்ததான முகாம்!

(றாசிக் நபாயிஸ்)

மருதமுனை அல்-மனார் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் அமைப்புக்களில் ஒன்றான "கோப்" சமூக சேவை அமைப்பின் வருடாந்த மாபெரும் இரத்ததான முகாம் எதிர் வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை இரத்ததான பிரிவுடன் இணைந்து அல்-மனார் பெண்கள் பிரிவில் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இரத்ததானம் இடம்பெறவுள்ளது.

"உதிரம் கொடுப்போம் உயிரைக் காப்போம்" என்னும் தொனிப் பொருளில் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரத்ததானம் செய்ய ஆர்வம் உள்ளவர்களுக்கு "கோப்" சமூக சேவை அமைப்பு அழைப்பு விடுக்கின்றது.

# உலக நகரங்கள் தின ஓவியப் போட்டி; வெற்றி பெற்றோருக்குப் பரிசளிப்பு!

உலக நகரங்கள் தினத்தை முன்னிட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையால் நடத்தப்பட்ட கொழும்பு மாவட்ட ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் நேற்று (14) வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த ஓவியப் போட்டி மூன்று பிரிவுகளின் கீழ் நடைபெற்றது. 1-5 வகையின் கீழ் "எனக்கு பிடித்த நகரம்", வகை 6-11 கீழ் "எதிர்கால நகரம் மற்றும் போக்குவரத்து", 12-13 வகையின் கீழ் "எரிசக்தி நெருக்கடி மற்றும் நிலையான நகர மயமாக்கல்" என்ற தலைப்புகளின் கீழ் மாணவர்கள் படங்களை வரைவதற்கு வாய்ப்பு கிடைத்தது.



இந்த நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, பிரதிப் பணிப்பாளர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்துகொண்டனர்.

12-13 பிரிவின் கீழ் "எரிசக்தி நெருக்கடி மற்றும் நிலையான நகரமயமாக்கல்" ஓவியம் வரைந்து முதலிடத்தைப் பெற்ற பன்னிப்பிட்டி தர்மபால வித்தியாலயத்தைச் சேர்ந்த அரங்கலை லோச்சன யசித் மாணவனுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர சான்றிதழை வழங்குகிறார்.

# கல்முனை மாநகர சபையின் வேலைகளில் அரசியல் இல்லை!

## ஆணையாளர் அஸ்மி தெரிவிப்பு

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் வேலைத் திட்டங்களில் எந்தவொரு அரசியல் தலையீடும் கிடையாது என்று மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

கல்முனை மாநகர பிரதான பஸ் தரிப்பு நிலையத்தில் நீண்ட காலத் தேவையாக இருந்து வரும் நவீன வசதிகள் கொண்ட மலசல கூடத் தொகுதியானது நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் விரிவுபடுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் மாநகர சபையின் பங்களிப்புடன் தற்போது துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

தேசிய பத்திரிகையில் திறந்த விலைமனுக் கோரல் செய்யப்பட்டு, உரிய கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, இவ் வேலைத் திட்டத்துக்கான



ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

மாநகர சபையால் இவ்வாறான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றபோது சுயாதீனமாகவும் வெளிப்படைத் தன்மையுடனுமே அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் எவ்வித அரசியல் தலையீடுகளும் இடம்பெறுவதில்லை என்பதை பொது மக்களுக்கு உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிலையில் மலசல கூடத் தொகுதி நிர்மாணம் உள்ளிட்ட வேலைத் திட்டங்கள் மற்றும் நிர்வாக விடயங்களில் சிலர் விசமத்தனமானதும் உண்மைக்குப் புறம்பானதுமான தகவல்களை சமூக வலைத் தளங்களில் பரப்பி வருகின்றமை தொடர்பாக எனது அவதானத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமானால் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராகத் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்முனை மாநகர சபையின் சேவைகள் மற்றும் வேலைத் திட்டங்கள் உள்ளிட்ட எந்த விடயமாயினும் உண்மையான தகவல்களை அறிய விரும்புவோர் அலுவலக நேரங்களில் நேரடியாக வருகைதந்தோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.–என்றார்.




# ஐயாயிரம் பனை விதைகள் நடும் திட்டம் கல்முனையில்!

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை நகர லயன்ஸ் கழகம் மற்றும் காரைதீவு லயன்ஸ் கழகம் என்பவை ஏனைய அமைப்புகளுடன் ஒன்றிணைந்து பத்தாயிரம் பனை விதைகள் மற்றும் வேம்ப மரக் கன்றுகள் நடும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

இந்த வேலைத்திட்டம் காரைதீவு கடற்கரை பிரதேசத்தில் லயன்ஸ் கழகத்தின் தலைவர்களான லயன் எந்திரி ம.சுதர்ஷன் மற்றும் லயன் எந்திரி த.சுரேந்திரகுமார் ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடற்கரையில் பனைமர விதைகளை நடுதல், கடற்கரையை சுத்தப்படுத்துதல், டெங்கு விழிப்புணர்வு பதாகையை



காட்சிப்படுத்தல், டெங்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற திட்டங்களை முன்னெடுக்கும் இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சர்வதேச லயன்ஸ் மாவட்ட ஆளுநர் லயன் இஸ்மத் ஹமீத் கலந்து கொண்டார்.

ஐயாயிரம் பனை விதைகள் மற்றும் ஐயாயிரம் வேம்பு மரக் கன்றுகள் நடும் திட்டமாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் தலைவர் ம.சுதர்சன் தெரிவித்தார்.

# மத்திய வங்கக் கடல் பகுதியில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்!


மத்திய வங்கக்கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி, காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறுகிறது.

அது வடமேற்கு திசையில் நகர்ந்து ஆந்திர கடலோரப் பகுதி அருகே ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறும்.

சென்னை வானிலை ஆய்வு மையம் இன்று காலையில் வெளியிட்டுள்ள அறிவிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

மத்திய வங்கக்கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி, காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறுகிறது. அடுத்த 6 மணி நேரத்தில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும்.

மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறும்.




தொடர்ந்து வடமேற்கு திசையில் நகர்ந்து ஆந்திர கடலோர பகுதி அருகே ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறும்.

அது நகரும் திசையில் மாற்றம் ஏற்பட்டு 17 ஆம் திகதி வடமேற்கு வங்கக்கடலில் ஒடிசா கடற்கரை அருகே அது செல்லக்கூடும்.

- இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சந்திரசேகர ராவை எதிர்த்து ஓரிடத்தில் 113 பேர் போட்டி

தெலுங்கானாவில் வருகிற 30 ஆம் திகதி 119 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது.

இதில் 3 ஆவது முறையாக வெற்றி பெற்று சாதனை படைப்போம் என்று பி.ஆர்.எஸ். கட்சித் தலைவர் முதலமைச்சர் கே. சந்திரசேகர ராவ் நம்பிக்கையுடன் கூறி வருகிறார்.

மாதம் 4,000 உதவித் தொகை, ரூ.500-க்கு காஸ் சிலிண்டர் என்ற காங்கிரசின் தேர்தல் வாக்குறுதிகளும் மக்களை கவர்ந்துள்ளன.

வெற்றி இலக்கு 75 இடங்கள் என்ற நோக்குடன் பா.ஜ.க. களமிறங்கி உள்ளது. இந்நிலையில், வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை முடிவுற்று இறுதிக்கட்ட வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டது.

அதன்படி, 119 தொகுதிகளுக்கு. மொத்தம் 4,798 பேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர். இதில் வேட்பு மனு பரிசீலனை செய்ததில் 2,898 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

வேட்புமனுக்களை வாபஸ் பெற இன்று கடைசி நாள் என்பதால், இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று மாலை வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தெலுங்கானா முதல் மந்திரி சந்திரசேகர ராவ் போட்டியிடும் கஜ்வேல் தொகுதியில் அவரை எதிர்த்து மொத்தம் 113 பேர் போட்டியிடுகின்றனர்.

இதேபோன்று அவர் போட்டியிடும் மற்றொரு தொகுதியான காமாரெட்டி தொகுதியில் சந்திரசேகர ராவை எதிர்த்து 57 பேர் போட்டியிடுகின்றனர்.

# லொறி - கார் விபத்தில் அறுவர் சம்பவ இடத்திலேயே மரணம்!

## உத்தரப்பிரதேசத்தில் சம்பவம்

உத்திரபிரதேசத்தில் டெல்லி - ஹரித்வார் தேசிய நெடுஞ்சாலையில் ராம்பூர்திராஹா என்ற இடத்தில் இன்று அதிகாலை லொறி மீது கார் மோதிய விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

டெல்லி மற்றும் மீரட்டில் உள்ள ஷாஹ்தாராவைச் சேர்ந்தவர்கள் ஹரித்வாருக்குச் சென்று கொண்டிருந்தபோது அதிகாலை 4 மணியளவில் இந்த விபத்து நடந்துள்ளது. கார் முழுவதுமாக லொறிக்கு அடியில் சிக்கியதாகவும் விபத்திற்கான காரணம் காரின் அதிவேகம் அல்லது டிரைவரின் கவனக்குறைவாக இருக்கலாம் எனவும் பொலிஸார் தரப்பில் கூறப்படுகிறது.



இந்த விபத்துக் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் டெல்லியை சேர்ந்த குணால் (23), சிவம் தியாகி (22), பராஸ் சர்மா (18), தீரஜ் (22), விஷால் (20), மற்றும் மீரட்டைச் சேர்ந்த அமன் (22) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



## ஜம்மு - காஷ்மீரில் இன்று பயங்கரம்

# 300 அடி பள்ளத்தாக்கில் பாய்ந்து நொறுங்கிய பஸ்

## 36 பேர் சாவு; 19 பேருக்குப் படுகாயம்

ஜம்மு காஷ்மீர் மாநிலம் தோடாவில் உள்ள படோடே- கிஷ்ட்வார் தேசிய நெடுஞ்சாலையில் துருங்கல்- அசார் பகுதி அருகே உள்ள 300 அடி பள்ளத்தாக்கில் பஸ் ஒன்று இன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

கட்டுப்பாட்டை இழந்த பஸ் பள்ளத் தாக்கில் கவிழ்ந்து நொறுங்கியது. இதில் பயணித்த ஏராளமான பயணிகள் படுகாயமடைந்தனர். விபத்து குறித்த தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புக் குழுவினர் விபத்தில் சிக்கியவர்களை மீட்டு வருகின்றனர்.

இதில், 36 பேரின் சடலங்கள் மீட்கப் பட்டுள்ளன. மேலும், 19 பேர் படு காயங்களுடன் மீட்கப்பட்டு கிஷ்த்வார் மற்றும் தோடா ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனையில் சேர்க் கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களை ஏற்றிச் செல்ல ஹெலிகொப்டர் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

இதுகுறித்து மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறுகையில், “காய மடைந்தவர்கள் தேவைக்கேற்ப மாவட்ட மருத்துவமனை கிஷ்த்வார் மற்றும் ஜி.எம்.சி. தோடாவுக்கு மாற்றப்படுகி றார்கள். மேலும் காயமடைந்தவர்களை மாற்ற ஹெலிகொப்டர் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும்” என்றார்.

ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி, எக்ஸ் தளத்தில் விபத் தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

மேலும், விபத்தில் இறந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் மோடி நிவாரணம் அறிவித் துள்ளார். அதன்படி, உயிரிழந்தவர்க ளின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் நிவாரணம் வழங்கப் படும் என்று அவர் அறிவித்துள்ளார்.



# மனிதப் பேரவல நிலையில் காசாவின் மருத்துவமனை!

## 179 சடலங்கள் அங்கேயே ஒன்றாகப் புதைப்பு

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான போர் காரணமாக காசா பகுதியில் அமைந்து இருக்கும் மிகப் பெரிய மருத்துவமனையில் கண்கலங்க செய்யும் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. போர் காரணமாக கடந்த 72 மணி நேரத்திற்கும் அதிகமாக மின்சாரம், தண்ணீர் மற்றும் உணவு என எந்த விதமான அத்தியாவசிய சேவையும் கிடைக்காமல் மருத்துவர்கள், நோயாளிகள் மற்றும் பொது மக்கள் என பலரும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

அத்தியாவசிய வசதிகள் இல்லாத காரணத்தால், அல் ஷிஃபா மருத்துவமனையின் செயல்பாடுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இதன் காரணமாக மருத்துவமனையில் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

வெளியுலக தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிட்டன. மருத்துவமனைக்கான எரிபொருள் அனைத்தும் தீர்ந்துவிட்ட நிலையில், நோயாளிகள் ஒவ்வொருவராக உயிரிழக்கத் தொடங்கினர். குறிப்பாக தீவிர சிகிச்சை பிரிவில் உள்ள நோயாளிகள் அடுத்தடுத்து உயிரிழந்தனர்.

ஹமாஸ் அமைப்பினர் மருத்துவமனைகளையும், நோயாளிகளையும் கேடயங்களாக பயன்படுத்தி தாக்குதல் நடத்துகின்றனர் என இஸ்ரேல் தரப்பு குற்றம்சாட்டி உள்ளது. மேலும், ஹமாஸ் அமைப்பின் சுரங்கப்பாதை வலையமைப்பின் மேல் அல் ஷிபா மருத்துவமனை அமைந்திருப்பதாகவும் இஸ்ரேல் கூறியிருக்கிறது. இந்த குற்றச்சாட்டை ஹமாஸ் திட்டவட்டமாக மறுத்துள்ளது.



இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல் மற்றும் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால் நிர்கதியற்ற நிலையில் உள்ள அல் ஷிபா மருத்துவமனை கிட்டத்தட்ட திகில் மாளிகை போல் காட்சியளிக்கிறது. நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது. பச்சிளம் குழந்தைகள் உள்ளிட்ட 179 பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

அந்தச் சடலங்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி, அடக்கம் செய்வதற்கான வசதிகள் இல்லாத அவல நிலை உருவாகி இருக்கிறது.

இதன் காரணமாக 179 சடலங்கள் அல் ஷிஃபா மருத்துவமனை வளாகத்தின் உள்ளேயே மொத்தமாக புதைக்கப்பட்டன என மருத்துவமனையின் தலைவர் முகமது அபு சல்மியா அதிர்ச்சி தகவல் தெரிவித்து இருக்கிறார்.

வேறு வழியில்லாமல் சடலங்களை மொத்தமாக புதைக்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மருத்துவமனை வளாகம் முழுக்க சடலங்களில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக செய்தியாளர் ஒருவர் தகவல் தெரிவித்தார்.

மேலும் மருத்துவமனையில் பணி யாற்றி வரும் மருத்துவர், இங்குள்ள சூழல் மனிதாபிமானமற்றதாக இருக்கிறது எனத் தெரி வித்துள்ளார். இதோடு மருத்துவமனையில் மின்சாரம், தண் ணீர் மற்றும் உணவு என எதுவுமே இல்லை என் றும் அவர் தெரிவித்தார்.

அல் ஷிஃபா மருத்து வமனையை இஸ்ரேல் இராணுவம் சுற்றி வளைத்த காரணத்தால், வெளியுலகத்துடனான தொடர்பை இழந்துள்ளது. மருத்துவமனைகளின் அடிதளத்தில் சுரங்கப்பாதை அமைத்து ஹமாஸ் அமைப்பினர் மறைந்து இருக்கின்றனர் என இஸ்ரேல் குற்றம்சாட்டி அதற்கான ஆதாரங்களையும் சமீபத்தில் வெளியிட்டது. ஆனால், இந்த குற்றச்சாட்டுகள் அனைத்தையும் ஹமாஸ் மற்றும் காசா சுகாதாரத்துறை அதிகாரிகள் முழுமையாக மறுத்துள்ளனர்.

இது குறித்து ஐ.நா. வெளியிட்டு இருக்கும் அறிக்கையின் படி, அல் ஷிஃபா மருத்துவமனையினுள் நோயாளிகள், மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் இடம்பெயர்ந்த குடிமக்கள் என மொத்தம் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் சிக்கி இருக்கலாம் என்று தெரிவித்து இருக்கிறது. கடுமையான மோதல் காரணமாக மருத்துவமனையில் இருந்து தப்பிக்க முடியாமல் அவர்கள் சிக்கியிருக்கின்றனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

# இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவில் பேரணி

## 2.9 லட்சம் பேர் திரண்டனராம்

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான மோதல் ஒரு மாதத்திற்கும் மேலாக தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்த போரில் 11 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். 2,700 பேர் காணாமல் போயுள்ளனர். இஸ்ரேலில் 1,200 பேர் உயிரிழந்து இருக்கின்றனர். இஸ்ரேலில் இருந்து காசாவுக்கு 240 பேர் பணய கைதிகளாக பிடித்து செல்லப்பட்டு உள்ளனர்.

அவர்களை மீட்கும் தீவிர பணியில் இஸ்ரேல் பாதுகாப்பு படை ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில், இஸ்ரேல் நாட்டில் இருந்து காசாவுக்கு பிடித்துச் செல்லப்பட்ட பணயக் கைதிகளை விடுவிக்க கோரி, அமெரிக்காவின் வொஷிங்டன் டி.சி.யில் 2.9 லட்சம் பேர் பேரணியாகச் சென்றனர்.

இஸ்ரேல் அதிபர் ஈசாக் ஹெர்ஜாக் லைவ் வீடியோ வழியே திரளான கூட்டத்தினரிடம் ஆற்றிய உரையின்போது,



ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினரால் பணயக் கைதியாக பிடித்து வைக்கப்பட்டு உள்ள குழந்தைகள், சிறுவர் சிறுமிகள், ஆடவர் மற்றும் மகளிருக்காக பேரணி நடத்த இவர்கள் ஒன்றிணைந்து உள்ளனர்.அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் உலகம் முழுவதும் ஒவ்வொரு யூதரும் பெருமையுடனும் மற்றும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கான உரிமைக்காக பேரணி நடைபெறுகிறது என பேசியுள்ளார்.

இந்த பேரணியில், கல்லூரி மாணவ மாணவிகளும் பங்கேற்றனர். அவர்கள் பணயக் கைதிகளுக்கு ஆதரவாக வாசகங்கள் அடங்கிய ஆடைகளை அணிந்தபடி காணப்பட்டனர். அக்டோபர் 7 ஆம் திகதிக்குப் பின்னர் இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவில் அதிக அளவில் மக்கள் கூடிய நிகழ்வாக இது உள்ளது.

இதற்காக முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன என அந்நாட்டின் உள்நாட்டு பாதுகாப்புக்கான துறை தெரிவிக்கின்றது. யூதர்களுக்கு எதிரான போக்கை கண்டிக்கும் வகையிலும் மற்றும் பணய கைதிகளை விடுவிக்க கோரியும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



# மலையக மக்கள் உரிமை இழந்த நாள்!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

**(மலைகளில் உரமாகி, தேயிலையில் இரத்தமாகி, கூடைக்குள் ஒரு தேசத்தை சுமந்த மலையக மக்கள் 1948 நவம்பர் 15இல் நாடற்றவரான நாளாகும் மலையகத்தை எழில் கொஞ்சும் பூமியாக மாற்றிய வலிசுமந்த மக்களின் வரலாற்றுப் பார்வையாக இந்தக் கட்டுரை)**

அந்நியரின் சுரண்டலுக்காய் தமது இரத்தத்தையே உரமாக்கி, இலங்கையின் பொருளாதாரத்தை வளப்படுத்திய 10 லட்சம் மலையக மக்களது குடியுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவரென பிரகடனப்படுத்தப்பட்ட நாள் 1948 நவம்பர் 15.

கூடைக்குள் தேசத்தை சுமந்த மக்கள்

மலைகளில் உரமாகி, தேயிலையில் இரத்தமாகி, கூடைக்குள் ஒரு தேசத்தை சுமந்த மலையக மக்கள் நாடற்றவரான நாளே 1948 நவம்பர் 15.

அன்று மொத்தச் சனத்தொகையில் 11.7வீதமாக இருந்த இலங்கை சனத்தொகை அளவில் இரண்டாம் நிலையில் இருந்த மலையக தமிழர்கள் இன்று எண்ணிக்கையில் நான்காம் நிலைக்குத் தள்ளப்பட்டதற்கும், இன்றைய நாள் வரை மூன்றாம் தர பிரஜைகளாக நடத்தப்படுவதற்கும் இந்தச் சட்டமே காரணம் என்பது மறுக்கப் படமுடியாதது.

இலங்கை பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரமடைந்து வெறும் 285 நாள்களுக்குள் யாரெல்லாம் இலங்கை நாட்டவர்கள் என்பதை தீர்மானிப்பதற்காக கொண்டுவரப்பட்ட சட்டம் யாரெல்லாம் இலங்கை பிரஜைகள் அல்ல என்பதை தீர்மானிப்பதற்கான சட்டமாக மாறி இந்த நாட்டின் இரண்டாவது அதிகளவான சனத்தொகையைக் கொண்டிருந்த சமூகத்தை இலங்கையில் நாடற்றவர்களாக்கிய கரும்புள்ளி வரலாற்றுடனேயே இலங்கை நாடாளுமன்றம் தனது வரலாற்றைத் தொடங்குகின்றது.

உலக வரலாற்றிலே விந்தையான, வேதனையளிக்கும் நிகழ்வான நவம்பர் 15, 1948 மனித உரிமைக்கு மறுப்புத் தெரிவித்த நாளாகும்.

கடல் கடந்து கவலை தீர வந்த மக்கள்

1820 - 1840 காலப் பகுதியில் இந்தியாவின் தென்மாநிலத்தில் அங்கு வாழ்ந்த அப்பாவி மக்களைக் கூலித் தொழிலாளர்களாக இலங்கைக்கு அழைத்து வந்தனர்.

1815ஆம் ஆண்டு கண்டி இராஜ்ஜியத்தை பிரித்தானியர் கைப்பற்றிய பின்னர் மலையகமெங்கும் வெள்ளையர்களின் ஆதிக்கத்தில் குறைந்த கூலிக்காய் கொண்டு வரப்பட்ட பிரிட்டிஷாரின் கைங்கரியத்தை உணராத இந்த மக்கள் தமது மனித வளத்தை தியாகம் செய்து மலைகளைச் செய்து தேயிலைப் படர்ந்த சோலையாக்கினர்.

1823 இல் அறிமுகப்படுத்தப்பட்ட காப்பி பயிரிடலுக்குக் காரண கர்த்தாக்களாகி அந்நியனுக்குப் பெருலாபமீட்டிக் கொடுத்தனர். பிரிட்டிஷாரது ஆட்சியில் தென்னிந்தியாவிலிருந்து வறுமையைப் போக்க குடிபெயர்ந்த இந்த மக்களின் வரலாறு வேதனை நிறைந்தது.

கடல் கடந்தால் கவலை தீரும் என்ற நம்பிக்கையுடன் இலங்கைத் தீவில் காலடி வைத்தவர்களுக்குக் காத்திருந்தது காடுகளும் கரடு முரடு நிறைந்த மலைகளுமே.

**வலிசுமந்த பயணம் !**

இந்தியாவில் இருந்து வரும் வழியிலும், வந்துகுடியேறிய பின்னரும் இம்மக்கள் அதிகமான இன்னல்களை எதிர்கொண்டனர். ஆதிலெட்சுமி என்ற கப்பல் கடலில் மூழ்கியதால் 120 பேர் செத்துமடிந்தனர் என்ற வரலாறும் இருக்கின்றது.

இவ்வாறு வலிசுமந்த பயணம் மேற்கொண்டவர்கள் மலைப்பாங்கான பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டதால் – மலையகத் தமிழர் என்றும், இந்திய வம்சாவளித் தமிழர் என்றும் அடையாளப்படுத்தப்பட்டனர்.

1880 இல் கோப்பியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பெரும் லாபம் ஈட்டும் தேயிலையைப் பயிரிடல் பிரிட்டிஷாரால் ஆரம்பிக்கப் பட்டபோது மலையகத் தொழிலாளர்களது உழைப்பே தேயிலைச் செடிகளுக்கு உரமானது.

ஆனால் இவற்றின் மத்தியிலே இவர்கள் பட்டத் துன்பங்கள் என்றுமே முடிவுக்கு வரவில்லை. இந்தியாவிலே நிலச்சுவான்தாரர்களாலும், நாட்டாண்மையாலும் சுரண்டப்பட்டு, அடக்கப்பட்ட இந்த மக்கள் இலங்கையிலும் வெள்ளையனாலும், கங்காணிகளாலும் சொல்லொணாதுன்பத்துக்குமுகங்கொடுத்தனர்.

**எழில் கொஞ்சும் பூமியாக !**

காடு மேடாகவும், கல்லு முள்ளாகவும் காட்சியளித்த மலை நாட்டைத் தமது கடின உழைப்பால் எழில் கொஞ்சும் பூமியாக மாற்றியதுடன், இலங்கையின் பொருளாதாரத்தையும் தோளில் சுமந்தனர். ஆனாலும், அவர்கள் வசிப்பதற்கு அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட லயன் அறைகளிலேயே பல தசாப்தங்களைக் கடந்தனர்.

இன்றைய 21 ஆம் நூற்றாண்டிலும் இந்த நிலைமை முழுமையாக இன்னமும் மாறவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

1931 ஆம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தம் மூலம் வாக்குரிமை பெற்ற போதும் அது 1947 – 1948 களில் கொண்டுவரப்பட்ட இந்திய – பாகிஸ்தானிய ஒப்பந்தம், ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தம், பிரஜாவுரிமைச் சட்டங்களால் பறிக்கப்பட்டது.

இதன்பின்னர் 3 தசாதப்தங்களுக்கு மேலாக நாடற்றவர்களாகவே மலையக மக்கள் வாழ்ந்தனர்.

வாழ்க்கையின் இருப்புக்காய், தமது உழைப்பை வெறுமனே விற்ற இவர்களது வாழ்வு, இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின், கூட இருந்தவரால் குழிபறிக்கப் பட்டது என்பதே வரலாற்று உண்மை.

இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கி விட்டு வெள்ளையர்கள் வெளியேறிய பின்னர், சிங்களத் தேசியவாதிகள், மலையகத் தமிழர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

1947ஆம் ஆண்டில் இலங்கையின் முதல் நாடாளு மன்றத் தேர்தலில் ஏழு மலையகத் தமிழ்ப் பிரதிநிதிகளை மலையக மக்கள் தெரிவு செய்தனர். இடதுசாரிகளின் வெற்றிக்கு காரணமானவர்கள்.

இந்தக் கட்டத்தில் பௌத்த வெறியைத் தூண்டி தேர்தலில் பங்கு கொண்ட டி. எஸ். சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி மொத்த இடங்கள் 95 இல், 42 ஐ மட்டுமே பெற்றதோடு மொத்த வாக்குகளில் 39.5 சதவீதம் மாத்திரமே பெற முடிந்தது.

**(21ஆம் பக்கம் பார்க்க)**






# மலையக மக்கள் உரிமை இழந்த நாள்!

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களது நெருக்குதல்களால் 1948 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் திகதி இலங்கைக் குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்தனர்.

இந்த நேரத்தில்தான் தமது பதவி நாற்காலிகளுக்கு ஆபத்தென உணர்ந்த சிங்கள பெருந் தேசியவாதி கள் தமது கபட நாடகத்தைக் கையாண்டனர்.

இலங்கைப் பொருளாதாரத்தில் 80 சதவிகிதம் சம்பாதித்துக் கொடுப்பவர்களாகவும் கடினமான உழைப்புச் சக்தியை மிகக் குறைந்த விலையில் விற்பவர்களாகவும் உயர்ந்து நின்ற இவர்களை ஸ்தாபன மயப்பட்ட தொழிலாளர்களாகப் பொது அரசியல் வாழ்வில் பங்கெடுக்க அனுமதிப்பது தமது எதிர்கால நலன்களுக்கு சாவுமணி அடிக்கும் என்பதை உணர்ந்து சிங்கள அரசு, உலகின் வேறெந்த நாட்டிலும் காணப்படாத இந்தக் கொடியச் சட்டத்தை அமுல்படுத்தியது.

**பிரஜா உரிமை இழந்த மக்கள்**

இதனால் லட்சக்கணக்கான மலையக தமிழ் மக்கள் பிரஜா உரிமை இழந்து தேசிய உரிமை மறுக்கப்பட்டனர்.

பதவியில் அமர்ந்த சிங்கள அரசுகள் தொடர்ந்து மாறி மாறிப் பல்வேறு ஒடுக்குமுறைகளில் இந்த மக்களை வதைப் படுத்தியதை வரலாறு காட்டும். கட்டாயக் குடியேற்றங்களாலும், கொடூர இனக் கலவரங்களாலும் தமது பாரம்பரிய மண்ணில் இவர்கள் அகதிகளாயினர். அனாதைகளாக விரட்டப்பட்டனர்.

ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தத்தால் இந்தியாவுக்குக் குடிபெயர்ந்தவர்களாக இடம்பெயர்ந்த இந்த மக்களுக்கு இந்தியாவிலும் 'சிலோன்' காரன் என்ற பட்டம் கிடைத்ததே தவிர வேறெந்த நன்மையும் ஏற்படவில்லை.

ஆயினும் ஈழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் லட்சக் கணக்கான உழைக்கும் மக்கள் தமது பாரம்பரிய மண்ணாக தாம் காலங் காலமாக வளப்படுத்தி வாழ்ந்த அந்த மண்ணையே நேசிக்கின்றனர். ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டு சிங்கள அராஜக ஆட்சி நடந்த வேளையில் கூட மண்ணை மீட்கப் போராடியது வரலாற்றின் வெற்றிப் போக்கே எனலாம்.

**பெரும் போராட்டங்களை நடத்திய மக்கள்**

மலையக மக்கள் குடியுரிமை, வாக்குரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்குப் பெரும் போராட்டங்கள் நடத்தினர்.

1952ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், 7 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடத்திய மூன்று மாத சத்தியாக்கிரகப் போராட்டம் அன்றிருந்த அரசின் கவனத்தை ஈர்த்தது.

1958ஆம் குடியுரிமை சட்டத்தின் பிரகாரம், பிரஜாவுரிமை பெற்றவர்களைத் தவிர ஏனைய நாடற்றவர்களாக கருதப்பட்ட மலையக மக்களுக்குக் குடியுரிமை வழங்கும் விசேட சட்டம் 1988 நவம்பர் 9 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட சட்ட மூலமாகவே வழங்கப்பட்டது.

இதனால் நாற்பது வருடங்களாக அரசியல் இழுபறிகளால் தீர்வு காணாத பெரும் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தது. மலையக சமுதாயத்தினர் "நாடற்றவர்" என்ற பதத்தில் இருந்து விடுபட்டனர்.

**முன்னேறும் மலையக மக்கள்**

கல்வியிலும் மலையக மக்கள் முன்னேறி வருகின்றனர். அண்மைய ஆண்டு புள்ளி விபரங்களின்படி பல கலைக்கழக பிரவேசமும் வரவேற்கும் வகையில் அமைந்துள்ளன.

பெரும் போராட்டத்துக்கு மத்தியில் மாறிவரும் மலையக சமூகம் இன்று அனைத்துத் துறைகளிலும் தலை தூக்க ஆரம்பித்துள்ளது. சட்டத்தரணிகள் முதல் தலைநகரில் பெரும் வர்த்தகர்கள்வரை மலையகத் தமிழ்ச் சமூகத்தில் இருந்து இணைந்து வருகின்றனர்.

அத்துடன் மலையகத்தில் மருத்துவமனைகளை அமைக்க இந்திய அரசு நிதியுதவிகளைச் செய்துள்ளதுடன், மலையக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் உதவிகளையும் வழங்கி வருகின்றது.

இந்திய அரசும் மலையக மக்களின் நிலையைக் கருத்திக் கொண்டு, வீட்டுத் திட்டம் ஒன்றின் ஊடாக நேசக்கரம் நீட்டி உதவி வருகிறது.

மலையக மக்களின் சுகாதாரத்துறை, கல்வித்துறை என்பவற்றை மேம்படுத்துவதிலும் அந்த நாட்டு அரசு அக்கறைக் கொண்டு உதவி வருவதையும் நாம் காணலாம்.

**விழித்து எழுந்த மலையகம்**

1940 ஆம் ஆண்டு பிரிட்டிஷாரின் ஆட்சியை எதிர்த்து உயிர் துறந்த கோவிந்தன் போன்றோரும், 1976 இல் தாம் வாழும் மண்ணைப் பறித்தெடுக்க யாருக்கும் உரிமையில்லை என்ற கோஷத்துடன் போராடி மரணித்த சிவனு – லட்சுமணன் போன்ற ஆயிரக் கணக்கானோர் வாழ்ந்து போராடிய மலையகம் விழித்து எழுந்ததால் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது.

# விவசாயத்தை வளப்படுத்த பிரார்த்தனை நிகழ்வு

(எம். எப். நவாஸ்)

அக்கரைப்பற்று ஸகாத் நிதியத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை அக்கரைப்பற்று ஜும்மா பெரிய பள்ளிவாசலில் விவசாயத்தை வளப்படுத்துவோம் எனும் தொனிப் பொருளில் துவா பிரார்த்தனையும் விசேட உரையும் இடம் பெறவுள்ளன.

